**சுருக்கம்**

பணியமைப்பு – வேலூர் மாநகராட்சி – உதவி வருவாய் அலுவலர் – புதியதாக நான்கு பணியிடங்கள் தோற்றுவித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை**

அரசாணை (நிலை) எண்.33

நாள் 03.03.2020
திருவள்ளுவர் ஆண்டு, 2051
விகாரி, மாசி 20
படிக்கப்பட்டது: –

1. ஆணையர், வேலூர் மாநகராட்சியின் கடித ந.க.எண்.சி1/6091/2018, நாள் 23.08.2019 மற்றும் 10.12.2019.
2. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.21154/2019/மாநஅ2, நாள் 27.12.2019

*******

**ஆணை:**

மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஆணையர், வேலூர் மாநகராட்சி அவர்கள் கீழ்க்காணும் விவரங்களைத் தெரிவித்துள்ளார்:-

(i) வேலூர் மாநகராட்சி 01.08.2008 முதல் மாநகராட்சி நிலைக்கு தரம் உயர்த்தப்பட்டு அதனைத் தொடர்ந்து கடந்த 2011–ம் ஆண்டு எல்லை விரிவாக்கத்தின் சமயம் இரண்டு அண்டை நகராட்சிகள், 6 பேரூராட்சிகள் மற்றும் 9 ஊராட்சிகள் இணைக்கப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்டு மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. மாநகராட்சியாக செயல்பட்டு வரும் இம்மாநகராட்சியின் மொத்த பரப்பளவு 87.94 சதுர கிலோமீட்டர் ஆகும் மற்றும் மொத்தம் 60 வார்டுகளை உள்ளடக்கி செயல்பட்டு வருகிறது.

(ii) வேலூர் நகராட்சி மாநகராட்சியாக 01.08.2008 முதல் தரம் உயர்த்தப்பட்டு அரசாணை (நிலை) எண்.125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை, நாள் 26.11.2018–ல் மாநகராட்சிப் பணிவிதிகளின்படி புதிய பணியிடங்கள் தோற்றுவித்தும், பணியிடங்களை ஒருங்கிணைத்து பெயர் மாற்றம் செய்தும், காலாவதியான பணியிடங்களை புதுப்பித்து நிரப்பிடவும் அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ள நிலையில், இதர மாநகராட்சிகளுக்கு அனுமதிக்கப்பட்டதுபோல் வேலூர் மாநகராட்சிக்கு உதவி வருவாய் அலுவலர் நிலையிலான பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கப்படவில்லை.

(iii) வேலூர் மாநகராட்சி ஏற்கனவே நகராட்சியாக செயல்பட்டு வந்த காலத்தில் வருவாய் பிரிவில் 4 வருவாய் ஆய்வாளர் பணியிடங்களும் மற்றும் சந்தை கண்காணிப்பாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு பணிபுரிந்து வந்த நிலையில் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதால் பணிவிதிகளின்படி வருவாய் ஆய்வாளர் பணியிடங்கள் உதவியாளர் பணியிடங்களாக மாற்றம் செய்யப்பட்டு விட்டதால், உதவியாளர்களே

...2

Scanned with CamScanner

வருவாய் ஆய்வாளர்களாக கூடுதல் பொறுப்பு வகிக்கப்பட்டு வருவாய் பிரிவு தொடர்பான பணிகளை தற்போது மேற்கொண்டு வருகின்றனர். இதனால், மாநகராட்சியின் நான்கு மண்டலங்களிலும் சொத்து வரி, குடிநீர் கட்டணம் உள்ளிட்ட இனங்களின்கீழ் மேற்கொள்ளப்படும் வரி விதிப்புகளை வசூல் செய்திடவும், மாநகராட்சியின் ஏல உரிமை இனங்கள், கட்டுமானங்கள் மூலம் பெறப்படும் வாடகைத் தொகையை வசூல் செய்திடவும் நிர்வாக ரீதியாக சிரமங்கள் ஏற்படுகிறது. இதர மாநகராட்சிகளில் வருவாய் பிரிவிற்கென உதவி ஆணையர் (வருவாய்) மற்றும் உதவி வருவாய் அலுவலர் பணியிடங்கள் முறையே மைய அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகங்களுக்கு அனுமதிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

(iv) மாநகராட்சியின் நான்கு மண்டலங்களிலும் நீதிமன்ற தாவாவில் கீழமை நீதிமன்றம், வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் மற்றும் உயர்நீதிமன்றங்களில் பல்வேறு வழக்குகள் சொத்து வரி நிர்ணயம் தொடர்பாக நிலுவையில் இருந்து வருகிறது. இதன்படி, நீதிமன்ற வழக்குகளை உரிய ஆவணங்களின் அடிப்படையில் முடிவுக்கு கொண்டுவந்து வழக்கால் சூழப்பட்ட இனங்களின் மூலம் வசூலிக்கப்படவேண்டிய வசூல் தொகையினை வசூல் செய்திடவும், தவிர, மாநகராட்சியின் ஏல உரிமை இனங்கள், மாநகராட்சிக்குச் சொந்தமான கட்டுமானங்கள் மூலம் கிடைக்கப் பெறும் வாடகைத் தொகை, உயர்த்தப்பட்ட சொத்துவரியினை எதிர்த்து சொத்தின் உரிமையாளர்களால் தொடரப்பட்ட வழக்குகளை முடிவுக்கு கொண்டு வருதல் மற்றும் அனைத்து வரி இனங்களின் மூலம் பெறப்படும் வருவாயினை எய்திடவும், இது தொடர்பான பணிகளை காலமுறையாக கண்காணித்து மேற்பார்வை செய்யும் பணிகளுக்கு மண்டலம் அலுவலகம் ஒன்றிற்கு ஒரு உதவி வருவாய் அலுவலர் பணியிடம் என்ற அடிப்படையில் நான்கு மண்டலங்களுக்கு 4 உதவி வருவாய் அலுவலர் பணியிடங்கள் ஏற்படுத்துவது நிர்வாக ரீதியாக மிகவும் அத்தியவாசியமான ஒன்றாகும்.

(v) மேற்படி 4 உதவி வருவாய் அலுவலர் பணியிடங்களை தோற்றுவிக்கும் பட்சத்தில், இப்பணியிடங்களை மாநகராட்சியின் பணிவிதிகளின்படி பதவி உயர்வு மூலம் பூர்த்தி செய்வதால் ஆண்டொன்றுக்கு ரூ.97,200/– மட்டுமே கூடுதல் செலவினமாகும். தற்போது, இம்மாநகராட்சியின் மொத்த வருவாயில், நிர்வாகச் செலவினத்திற்கு அனுமதிக்கப்பட்ட தொகையில் 49%–க்கு குறைவாகவே உள்ளது. இக்குறைந்தபட்ச கூடுதல் செலவினத்தை மாநகராட்சி ஏற்கும் நிலையில் மாநகராட்சியின் நிதிநிலை திருப்திகரமாக உள்ளது.

(vi) மேற்படி பொருள் தொடர்பாக, வேலூர் மாநகராட்சி மாமன்றத் தீர்மானம் எண்.781, நாள் 28.06.2019–ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளது.

(vii) மாநகராட்சிப் பணிவிதிகளின்படி தற்போது கண்காணிப்பாளர் நிலையில் 6 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். உதவி வருவாய் அலுவலர் பணியிடங்கள் அரசால் மாநகராட்சிக்கு தோற்றுவிக்கப்படும் தேதியில் மேற்படி ஆறு பணியாளர்களில் தகுதி வாய்ந்தவர்களை பணிமாறுதல் அடிப்படையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

(viii) கண்காணிப்பாளர் நிலையில் ஏற்படும் நான்கு காலிப் பணியிடங்களை உதவியாளர் / கணக்கர் நிலைகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்களில் தகுதி பெற்றவர்களை பதவி உயர்வு மூலம் நிரப்பப்படும்.

..3...

Scanned with CamScanner

(ix) உதவி வருவாய் அலுவலர் பணியிடங்களை கண்காணிப்பாளர் பணியிடத்திலிருந்து பணிமாறுதல் மூலமே நிரப்பிடுவதால் கூடுதல் செலவினம் ஏதும் ஏற்படாது மற்றும் கண்காணிப்பாளர் நிலையில் ஏற்படும் காலிப்பணியிடங்களை உதவியாளர் / கணக்கர் நிலையில் இருந்து பதவி உயர்வு மூலம் பூர்த்தி செய்வதால் ஆண்டு ஒன்றுக்கு தோராயமாக ரூ.1,76,160/– மட்டுமே கூடுதல் செலவினம் ஏற்படும். அது மாநகராட்சியின் மொத்த வருவாயில் அனுமதிக்கப்பட்ட நிர்வாகச் செலவினமாக 49 சதவீதத்திற்கும் குறைவாக அதாவது 40.80 சதவீதமாகவே உள்ளது.

2. மேலே பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், வேலூர் மாநகராட்சியில் நான்கு மண்டல அலுவலகங்களில் நான்கு உதவி வருவாய் அலுவலர் பணியிடங்களை தோற்றுவிக்கக் கோரும் வேலூர் மாநகராட்சி ஆணையரின் கருத்துருவினை நகராட்சி நிர்வாக ஆணையர் பரிந்துரை செய்து அரசுக்கு மேலனுப்பி உள்ளார்.

3. வேலூர் மாநகராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசுக்கு பரிந்துரை செய்துள்ள நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, பரிசீலனைக்குப்பின், வேலூர் மாநகராட்சியில் ஒரு மண்டல அலுவலகத்திற்கு ஒரு பணியிடம் வீதம், நான்கு மண்டல அலுவலகங்களில் நான்கு உதவி வருவாய் அலுவலர் பணியிடங்களை குறைந்தபட்ச ஊதியம் ரூ.35,600/– நிலை 12–ல் (35,600 – 1,12,800) முதலில் ஒரு வருடத்திற்கு மட்டும் தோற்றுவித்து அரசு ஆணையிடுகிறது. மேலும், மேற்கண்ட நான்கு உதவி வருவாய் அலுவலர் பணியிடங்களுக்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்து, வருங்காலங்களில் வேலூர் மாநகராட்சியின் வரி நிர்வாகம் மற்றும் வரி வசூலிப்பதில் ஏற்படும் முன்னேற்றங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும்.

4. இக்கோப்பு நிதித்துறையின் கோப்பு எண்.9908/நிதி (ந.நி.(ம)கு.வ) 2020, நாள் 26.02.2020 மற்றும் அ.சா.கு.எண்.10486/மை.ம.ஆ.பி/2020, நாள் 02.03.2020–இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

ஹர்மந்தர் சிங்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், எம்.ஆர்.சி.நகர், இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

ஆணையர், வேலூர் மாநகராட்சி, வேலூர்.

நகல்

நிதி (மை.ம.ஆ.பி/ந.நி (ம) கு.வ) துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை–600 108.

மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–600 009.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந.2) துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

இருப்புக்கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

3/3/2020

Scanned with CamScanner